பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 07 2024 6 30

தலைப்புச் செய்திகள் -

1. ரஷ்யாவில் **Kazan** மற்றும் **Yekaterinburg** ஆகிய இடங்களில் இந்திய துணை தூதரகங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. ஒருங்கிணைந்த கல்வி கட்டமைப்பை உருவாக்க மாநில அரசுகள் முன்வர வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. தமிழகத்தில் ஷெடியூல்டு வகுப்பினர் மீதான வன்கொடுமை வழக்குகளுக்கு தீர்வுகாண மாநில அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.
4. குற்ற செயல்களை தடுப்பதில் தமிழக அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக அமைச்சர் திரு மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.
5. இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டிவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று சென்னையில் நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

ரஷ்யாவில் **Kazan** மற்றும் **Yekaterinburg** ஆகிய இடங்களில் இந்திய துணை தூதரகங்களை அமைப்பதற்கு இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் சுற்றுலா மேம்படுவதற்கு இந்த தூதரகங்கள் பெரிதும் உதவிடும் என்று கூறினார்.

உலகின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இந்தியாவும் -ரஷ்யாவும் தோளோடு தோள் சேர்ந்து புதிய எழுச்சியுடன் செயல்படுவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா கடந்த பத்து ஆண்டுகளில் விரைவான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகக் கூறிய பிரதமர். உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவாகும் என்று கூறினார்.

இந்தியாவின் வளர்ச்சியை ஒட்டுமொத்த உலகமும் உற்று நோக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

மூன்றாவது முறையாக தமது தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியில் பொறுப்பேற்றுள்ளதைக் குறிப்பிட்ட பிரதமர், மேலும் மூன்று மடங்கு உத்வேகத்துடன் புதிய அரசு செயல்படும் என்றும் கூறினார்.

நாட்டின் சமூக கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய பிரதமர், மின்னணு பரிவர்த்தனை கட்டமைப்பு உலக அளவில் மிகுந்த நம்பிக்கையை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்கட்டமைப்பை மேமப்டுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும், வளர்ச்சிப் பாதையில் இளைஞர்களை இணைத்து வெற்றிபெறுவதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

அதிபர் திரு விளாடிமிர் புட்டின், இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை சிறப்பாக மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

[]<<<>>>[]

நாட்டில் ஒருங்கிணைந்த கல்வி கட்டமைப்பை உருவாக்குவதற்கு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்முன்வர வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு திட்டம் தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த பள்ளிக் கல்வி மேம்பாட்டுக்கான செயல் திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு திட்டத்தை கல்வித் துறையில் நிறைவேற்ற அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அறிவாற்றலில் வலிமைமிக்க நாடாக இந்தியாவை உருவாக்க அனைத்து மாநிலங்களும் தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

தரமான கல்வியை இந்த கொள்கை உறுதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரும் தங்களது தாய் மொழியில் கல்வி கற்பதற்கு தேசிய கல்விக் கொள்கை வழி வகுத்திருப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஷெடியூல்டு வகுப்பினர் மீதான தாக்குதல் மற்றும் வன்கொடுமை வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண மாநில அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய ஷெடியூல்டு வகுப்பினர் ஆணையத்தில் தமிழகத்தில் நடைபெறும் தாக்குதல் தொடர்பாக பிஜேபி குழுவினருடன் சென்று புகார் அளித்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசியல் தலைவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதை உடனடியாக தடுக்க வேண்டுமென்று திரு எல் முருகன் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் குற்றச்செயல்களைத் தடுக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படும் குற்றச்சாட்டை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்த ஒரு குற்ற சம்பவத்தையும் மாநில அரசு சமரசம் செய்து கொள்ளாது என்று கூறினார்.

குற்றங்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க மாநில அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் சட்டப்பேரவையில் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார்.

பல்வேறு குற்றச்செயல்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதையும் திரு மனோ தங்கராஜ் சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தினார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் தலைமைச்செயலாளர் திரு சிவ்தாஸ் மீனா, சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு அருண், உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் வீட்டிற்குச் சென்ற முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

சென்னை அயனாவரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த ஆம்ஸ்ட்ராங்கின் உருவப் படத்திற்கு திரு மு க ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோரும் ஆம்ஸ்ட்ராங் இல்லத்திற்குச் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

சிவகாசியில் இன்று நேரிட்ட பட்டாசு ஆலை வெடிவிபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் காய்கறி பயிர்களுக்கு ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டுமென்று ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே அனுமதியின்றி நடத்தப்பட்ட பட்டாசு ஆலையில் இருந்த பத்து லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசு தயாரிக்கும் மூலப்பொருட்களை காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

**[]<<<>>>[]**

கரூரில் சாலையோர பானிபூரி கடைகளில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று திடீர் சோதனை மேற்கொண்டனர்.

**[]<<<>>>[]**

திருப்பூரில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்த ஏழு கடைகளுக்கு அதிகாரிகள் ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்தனர்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமாக நடப்பு நிதியாண்டில் தனி நபர்கள் மற்றும் குழுக்கள் சிறுதொழில்கள் மற்றும் வியாபாரம் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படும் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டிவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது. சென்னையில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரிஷி ரெட்டி – **Dhakshineswar Suresh** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட்கணக்கில் நியூஸிலாந்தின் **Ajeet Rai – James Watt** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்று நடைபெற்ற முதல் சுற்ற ஆட்டத்தில் அவர் பிரேஸிலின் **Felipe Alves**-ஐ 6-1, 6-4 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டி இத்தாலியில் இன்று தொடங்கியது.

வரும் 16-ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில், 38 நாடுகளை சேர்ந்த 234 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் இப்போட்டியில் 19 பேர் பங்கேற்கின்றனர்.

***End of News***